**வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி - 2023/2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடெனப்து உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான (எஸ்ஓஈ) கூட்டுறவு நல்லாளுகை மற்றும் செயற்பாட்டு கையேடு மீதான வழிகாட்டுதல்களிற்கான பொது முயற்சி நிறுவனங்களின் 2021 நவம்பர் 16 இன் சுற்றறிக்கை எண். 01/2021 இன் பிரிவு 5.1 இன் படி, ஊழியர்களுக்கு மிகையூதியம் அல்லது இலாப அடிப்படையிலான ஊக்கத்தொகைகளை நிறுவனம் இடைக்கால மற்றும் இறுதி வரிகள் / பங்குலாபங்களை அறிவிக்காமல் வழங்கக்கூடாதென்பதுடன் 2023/2024 நிதியாண்டிற்கான லாபத்தின் அடிப்படையில் இடைக்கால மற்றும் | நிர்வாக ஒப்பந்தத்தின் 7.4.2 மற்றும் 7.4.3 ஆம் புள்ளி எண் படி. முகாமைத்துவமானது அனைத்து ஜீஓபீஎல் ஊழியர்களையும் பணியமர்த்த, பணிநீக்கம், பதவி உயர்வு, மேற்பார்வை, நேரடி மற்றும் பயிற்சி மற்றும் அவர்களின் இழப்பீடு, ஊக்கத்தொகை, சம்பளம், ஊதியம் மற்றும் வெகுமதிக் கொள்கைகளை நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்துள்ளது. மேலே உள்ள சரத்துக்களின் நிர்வாக ஒப்பந்தத்தின்படி நிறுவனத்தின் லாபத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்ட எக்ஸ்-க்ரேஷியா கொடுப்பனவு இயக்குநர்கள் குழு 2022-23 இல் பங்குலாபத்தை வழங்க | அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான (எஸ்ஓஈ) கூட்டுறவு நல்லாளுகை மற்றும் செயற்பாட்டு கையேடு மீதான வழிகாட்டுதல்களின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இறுதி வரிகள் / பங்குலாபங்களை அறிவிக்கப்படாமல் 2023/2024 ஆம் ஆண்டில் அதன் ஊழியர்களுக்கு மிகையூதியமாக ரூபா.168,808,998 தொகையை நிறுவனம் செலுத்தியுள்ளது. | அனுமதி அளித்தது, ஆனால் பாதகமான நடைமுறை விகிதத்தின் காரணமாக கடன்தீர்ப்பனவு சோதனை தோல்வியடைந்தது. இந்த நிதியாண்டிலும் (2023-24) கணக்காய்வு செய்யப்பட்ட நிதிகளின் மீதும் பங்குலாபத்தை அறிவிக்கும் நிலையில் நிறுவனம் உள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.1,024,701,000 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 5,649,161,000 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இலாபத்தில் ரூபா. 4,624,460,000 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் கம்பனியின் தேறிய வருமானம் ரூபா. 6,066,595,000 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

(ஆ) கம்பனியின் நிர்வாகச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா. 228,185,000 ஆல் அல்லது 12.5 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம் நிதிச் செலவினமானது முன்னைய ஆண்டில் ரூபா 1,405,681,000 இலிருந்து ரூபா 1,342,308,000 வரை ரூபா. 63,373,000 ஆல் அல்லது 4.5 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, கம்பனியின் மொத்தலாபம் முன்னைய ஆண்டில் ரூபா 8,427,866,000 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 4,254,952,000 வரை ரூபா 4,172,914,000 ஆல் அல்லது 49.5 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 1,024,701,000 தேறியலாபம் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனியால் வழங்கப்பட்ட தகவல்களின்படி, 2022 இலிருந்து 2024 வரையிலும் தமன பிரதேச சபைக்கு மதிப்பீட்டு வரியாக ரூபா 456,740 செலுத்தப்பட்டது. நிறுவனத்தின் ஊழியர்களுக்காக வழங்கப்பட வேண்டிய 233 உத்தியோகபூர்வ இல்லங்களில் 211 உத்தியோகபூர்வ இல்லங்கள் அங்கீகரிக்கப்படாத குடும்பங்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. மற்றும் அவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த நிலம் ஏற்கனவே அரசுப் பங்கில் சேர்க்கப்பட்டுள்ளதால், அனைத்து வரிகளையும் நாங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டும். எனவே, அனைத்து மதிப்பீட்டு வரியையும் உள்ளாட்சி நிர்வாகத்திடம் செலுத்த வேண்டும். நிதி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் ஆகியோரின் உதவியுடன் காணி குத்தகை ஒப்பந்தத்தை இறுதி செய்வது துரிதப்படுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தம் கைச்சாத்திட்டதும் நிறுவனம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க முடியும். | இல்லங்களை கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் நில குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டியதுடன், கையொப்பமிட்டவுடன் இந்த தரப்பினர்களுக்கு கம்பனியால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2009 மார்ச் 6 ஆம் திகதியிட்ட அமைச்சரவை நிமிடங்களின்படி, தமன பிரதேச செயலாளர் பிரிவில் 207.3584 ஹெக்டேயர் நிலத்திற்கு கரும்புச் செய்கைக்காக நிறுவனத்திற்கு 30 வருட குத்தகை வழங்கப்பட்டது. குத்தகைக் காலம் முடிந்து 13 | கரும்புச் செய்கை காணிகளின் முகாமைத்துவ உரிமை 5 வருட காலத்திற்கு காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் 15.02.2021 அன்று வழங்கப்பட்டு 1975 & 1989 ஆம் ஆண்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. 277.7539 | கம்பனி முகாமைத்துவமானது குத்தகை உடன்படிக்கையை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருடங்கள் கடந்துள்ள போதிலும், நிறுவன நிர்வாகம் அதன் உரிமை நிலையை தெளிவுபடுத்திய போதிலும், குத்தகை உரிமையைப் பெறுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாத அதேநேரம் 170.7345 ஹெக்டேயருக்கு குத்தகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அம்பாறையில் உள்ள நில அளவை அலுவலகத்தில் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ள நிலையில், இந்தக் காணியின் உரிமையைப் பெறுவதற்கு நிறுவனம் முன்னெடுக்கவில்லை மேலும், 36.6239 ஹெக்டேர் நிலத்திற்கு குத்தகை திட்டம் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வு திகதியிலுள்ளவாறு அம்பாறையில் உள்ள அளவை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. | ஹெக்டேர் நிலங்கள் மற்றும் அவற்றின் 30 வருட நிகர பெறுமதி தற்போதைய குத்தகை மதிப்பு வாடகைகள் அரசாங்க பங்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன. நிதி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் ஆகியோரின் உதவியுடன் காணி குத்தகை ஒப்பந்தத்தை இறுதி செய்வது துரிதப்படுத்தப்பட்டுள்ளது. தேவையான அனைத்து ஆவணங்களையும் அது தொடர்பான அறிக்கைகளையும் நில ஆணையாளருக்கு உரிய நேரத்தில் அனுப்பியுள்ளோம். தேவையான அனைத்து பின்தொடர்களும் சரியான நேரத்தில் செய்யப்படுகின்றன, ஆனால் மேலே உள்ள எண் (ஈ) இன் கீழ் விளக்கப்பட்டுள்ளபடி, இந்த நிலங்களின் வீடுகள், நிலங்கள் போன்றவற்றில் அங்கீகரிக்கப்படாத நபர்கள் வசிப்பதால், அரசாங்கத் தரப்பில் இருந்து நில குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை அரசாங்கத்தால் முடிக்க முடியவில்லை. . அதிகாரிகளின் தொடர்ச்சியான பின்தொடர்தல்கள் மற்றும் ஆதரவிற்குப் பிறகு, இந்த நீண்ட கால குத்தகையை இரண்டு கட்டங்களாக வழங்க ஒப்புக்கொண்டது. அதனடிப்படையில், பிரச்சினைக்குரிய நிலைமைகள் இல்லாத காணிகளுக்கு முதற்கட்டமாக நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு தேவையான ‘‘எல்’’ வரைபடங்கள் நில அளவைத் திணைக்களத்தினால் ஏற்கனவே சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தின் நேரடி கோரிக்கைக்கு காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. | |
| (இ) 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையின்படி, விவசாயிகளிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 2,043,877,258 இல் ரூபா 48,861,623 மற்றும் ரூபா 46,977,986 முறையே 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ளன. மேலும், அந்த நிலுவைத் தொகைகள் குறித்த விவரங்களை கம்பனியால் வழங்க முடியாதிருந்தது. | 2024 யூலை 31 இல் ரூபா 2,044 மில்லியன் நிலுவைத் தொகையில் 574 மில்லியன் தொகையை கம்பனிக்கு அறவிடக்கூடியதாக இருந்தது. மேலும் கம்பனி நீண்டகால நிலுவைத் தொகைகள் மற்றும் தீர்க்கப்படாத நிலுவைகளை தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றது. | விவசாயிகளிடமிருந்து பெற வேண்டிய நிலுவைக் கடன் தொகை அறவிடப்படுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டிற்கான வரிக்கு முந்தைய இலாபமானது ரூபா.4,271 மில்லியன் அல்லது 80 சதவீதத்தால் குறைந்துள்ளது. மீளாய்வாண்டில் சீனி விற்பனை வருமானம் ரூபா.2,496 மில்லியனாலும், எக்ஸ்ட்ரா நியூட்ரல் ஆல்கஹால் (இஎன்ஏ) விற்பனை வருமானம் ரூபா.3,680 மில்லியனாலும் குறைவடைந்தமை மீளாய்வாண்டில் இலாபம் குறைவதற்கு பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளது. | 2022/23 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023/24 ஆம் ஆண்டில் சர்க்கரை மற்றும் ஈஎன்ஏ வருமானம் குறைந்ததே முக்கிய காரணமாகவிருந்தது. வருமானமானது விலை மற்றும் அளவு இரண்டையும் கொண்டுள்ளது. சர்க்கரை விலை ரூபா.293/- லிருந்து ரூபா. 282/- மற்றும் ஈஎன்ஏ விலை ரூபா. 1258 முதல் 2023/24 ஆம் ஆண்டில் ஒரு லீற்றருக்கு ரூபா.1025 க்கு 2022/23 ஆம் ஆண்டில் உரத் தட்டுப்பாடு காரணமாக அனைத்து நடுகை மற்றும் ரட்டுன் இலக்குகள் கணிசமாகக் குறைந்ததால் குறைவடைந்திருந்தது. இது முக்கியமாக 2023/24 கரும்பு அறுவடையில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் உற்பத்தி மற்றும் விற்பனை அளவு குறைந்தது. 2023/24 ஆம் ஆண்டில் விற்கப்பட்ட சர்க்கரையின் அளவு 26,053 எம்ரீ இலிருந்து 18,287 எம்ரீ ஆகவும், ஈஎன்ஏயின் விற்பனையின் அளவு 5,085,488 பீஎல் இலிருந்து 2,653,900 பீஎல் ஆகவும் குறைந்துள்ளது. எனவே, மொத்த வருமானம் சீனியிலிருந்து ரூபா.2,496 மில்லியனாகவும் ஈஎன்ஏ இலிருந்து ரூபா.3,680 மில்லியனாகவும் மொத்தமாக ரூபா.6,176 மில்லியனாக குறைவடைந்தது. 2022-23 ஆம் ஆண்டை விட 2023-24 ஆம் ஆண்டில் வரிக்கு முந்தைய லாபம் 4,271 மில்லியன் குறைந்துள்ளது. ஆனால் 2023/24 ஆம் ஆண்டில் போதுமான உரம் கிடைக்காததால், விவசாயிகள் தங்கள் வயலை திறம்பட பராமரிக்க முடிந்தது. எனவே, 2024/25 ஆம் ஆண்டில் கரும்பு விநியோகம் தொடர்கிறது என தென்படுகின்றது. | கம்பனியின் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2023/2024 ஆம் நிதியாண்டில், 18,286.25 மெட்ரிக் தொன் சீனியை வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனிக்கு விற்பனை செய்துள்ளது. விற்கப்பட்ட சீனியின் உற்பத்திச் செலவு ரூபா. 5,280,299,063. ஆனால், சீனி விற்பனை மூலம் கிடைத்த வருமானம் ரூபா. 5,159,228,898 மாத்திரமாகவிருந்தது. இதன் விளைவாக நிறுவனம் ரூபா.121,070,164 நஷ்டத்தைச் சந்தித்தது. | தற்போது, உள்ளூர் சீனிக் கம்பனிகள் உள்ளூர் சீனி தேவையில் 15%க்கும் குறைவாகவே வழங்குகின்றன. மீதமுள்ள தேவை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனியின் விலைப் போட்டியால் உள்ளூர் சர்க்கரை நிறுவனங்கள் தங்கள் சீனி விற்பனை செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன. அத்தோடு, 2024 சனவரி 1 ஆம் தேதி முதல் சீனி தொழிலுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) விதிக்கப்பட்டது. அதுவும் சீனியை சந்தைக்கு விற்பதில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. தற்போது தளர்வான வெள்ளை சீனி விலை அண்ணளவாக சந்தையில் ஒரு கிலோ தளர்வான பிரவுன் சீனி ரூபா.250/- ஆகவுள்ளது. ரூபா.250/- கிலோ அது வற் உடன் இது ரூபா.295/-. ஆக இருக்கும். இது தொழிற்சாலை நுழைவு விலையாகவுள்ளதுடன் இறுதி விலையில் சில செலவுகள் சேர்க்கப்பட வேண்டும். வெள்ளை | உற்பத்திக்கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு விற்பனை விலை தீர்மானிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சர்க்கரை விலை காரணமாக உள்ளூர் சீனி நிறுவனத்தால் சீனியை எல்லை வைத்து விற்க முடியவில்லை. | |
| (இ) உற்பத்தி செலவு மற்றும் விரும்பிய இலாபத்தின் அடிப்படையில் சீனியின் விற்பனை விலையை கம்பனி நிர்ணயிக்கிறது. இருப்பினும், வெளிப்படைத்தன்மை இல்லாத ஒரு நிலையான நடைமுறையைப் பின்பற்றி ஒரு குழுவால் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 2023/2024 நிதியாண்டில் ஒரு கிலோ சர்க்கரையின் உற்பத்திச் செலவு ரூபா.288.75 ஆக இருந்தது. நிறுவனம் 13,186.25 மெட்ரிக் டொன்களை உற்பத்திச் செலவைக் காட்டிலும் குறைவான விலையில் ஒன்பது முறை விற்றது, இது மொத்த இழப்பு ரூபா.229,853,589 இனை எடுக்கின்றது. | சர்க்கரை விற்பனை செயல்முறையின் எஸ்ஓபீ இன் படி, ”தேர்ந்தெடுக்கப்பட்ட வாங்குபவர்கள் பின்னர் நிறுவனத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட அனுமதி குழுவின் அனுமதிக்கு அனுப்புகிறார்கள்” என்று தெளிவாகக் கூறுகிறது. அனுமதி குழுவில் நிதித் தலைவர், தொழிற்சாலைத் தலைவர், தலைமை செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் இரண்டு இயக்குநர்கள் குழு உள்ளனர். அனைத்து சீனி விற்பனை முடிவுகளும் அனுமதி குழுவால் எடுக்கப்பட்டது. எஸ்ஓபீ இன் படி, அனைத்து பொறுப்பும் மற்றும் கணக்களிப்பொறுப்பும் முறையே விற்பனை அதிகாரி மற்றும் கணக்காளரிடம் செல்கிறது. | விற்பனையை இலாபத்துடன் மேற்கொள்வதற்கு முறையான முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டும். |